**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.324/16**
**வழக்கு சாட்சி – அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சுருளிவேல் | தொழில் | இன்ஜினியர் |
| கிராமம் | உத்தமபாளையம் | சமயம் | |
| தாலுக்கா | உத்தமபாளையம் | வயது | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.24

**( 1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

எதிரிகளை தெரியும். எதிரிகள் மாரநாதா சபை சர்ச்சில் போதகர்களாக இருந்தார்கள். எதிரிகள்விக்டர்,அனிதாவும் கடந்த 2012 ம் வருடம் எனது அக்கா தனலட்சுமிக்கு இபியில் கணக்கீட்டாளராக வேலை வாங்கி தருவதாக கூறி ரூ.3,50,000/– வாங்கினார்கள். அதன்பின்னர் 10.11.13 தேதியில் இபியில் இருந்து உதவி பொறியாளருக்கான பணிக்கு 21.11.13 அன்று நேர்முகதேர்வு நடப்பதாக கடிதம் வந்திருந்தது. அது சம்மந்தமாக எதிரிகளிடம் கூறியபோது அவர்களுக்கு சென்னையில் பிலிப்ஸ்கென்றி என்ற நபர் சென்னையில் நல்ல செல்வாக்கு ஆன ஆள் என்றும், மேலும் இபியில் எனக்கு நிறைய ஆட்கள் தெரியும் என்றும் கூறி எதிரிகளிடம் ரூ11,00000/–த்தை கொடுத்தால் மேற்படி வேலை வாங்கிகொடுப்பதாக ஆசைவார்த்தை கூறினார்கள். மேற்படி தேர்வு முடிவுகள் 2014 ம் வருடம் பிப்ரவரிஅல்லது மார்ச் மாதம் வெளியானது. எனக்கு மேற்படி வேலை கிடைக்கவில்லை. அதனால் எதிரிகளிடம் நாங்கள் கொடுத்த பணத்தை திருப்பி கொடுக்குமாறு கேட்டோம். எதிரிகள் தற்போது எங்களிடம் பணம் இல்லை என்றும், பணத்திற்கான பொறுப்பாக 50 ரூபாய் பத்திரத்தில் 1.5.14 அன்று ரூ14,50,000/–த்தை பெற்றுக்கொண்டதாக எழுதிக்கொடுத்தார்கள். நாங்கள் மீண்டும் சென்று பணம் கேட்டபோது எனது அக்கா தனலட்சுமி மற்றும் ஈஸ்வரி அக்காவின் பெயரில்

காசோலைகளாக ரூ8,00,000/-த்திற்கு ஒரு காசோலையும், ரூ.6,50,000/-த்திற்கு ஒரு கசோலையும் கொடுத்தார்கள். மேற்படி காசோலைகளை வங்கிக்கு எடுத்து சென்றபோது பணம் இல்லை என்று திருப்பப்பட்டுவிட்டது. மீண்டும் எதிரிகளிடம் பணம் கேட்டோம். எதிரிகள் 2014 ம் வருடம் பல தவணைகளில் ரூ5,00,000/-த்தை கொடுத்தார்கள். நாங்கள் ஏற்கனவே பெற்றிருந்த கடனை மேற்படி பணத்தில் செலுத்தமுடியவில்லை. மீண்டும் எதிரிகளிடம் பாக்கி உள்ள தொகை பற்றி கேட்டோம். அதன்பின்னர் நான் எனது அம்மா பொன்னி, அக்கா தனலட்சுமி, ஈஸ்வரி ஆகியோர் எதிரிகளின் வீட்டிற்கு சென்ற பணம் பற்றி கேட்டபோது எதிரிகள் பணம் கேட்டு வீட்டிற்கு வந்தால் காலி செய்துவிடுவதாக மிரட்டினார்கள். எதிரிகளிடமிருந்து கிடைக்கவேண்டிய பாக்கி ரூ9,50,000/-த்தை பெறவேண்டி தேனி எஸ்பி ஆபிசில் புகார் கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. தனலட்சுமி பெயரில் கொடுக்கப்பட்ட காசோலை நகல் அசாஆ.2. ஈஸ்வரி பெயரில் கொடுக்கப்பட்ட காசோலை நகல் அசாஆ.3. 1.5.14 ம் தேதியிட்ட ஒப்பந்த பத்திரம் நகல் அசாஆ.4. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை** செய்யபடவில்லை.